# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

**குறள்:** குடிதழீஇக் கோல்ஒச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

**பொருள்:** குடிகளை அன்போது அனைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறும்.

**கூட்ட எண்: 04/2022**

**நகராட்சி அலுவலகம்**
**மயிலாடுதுறை.**

**நாள்: 24.05.2022**

**<u>சாதாரணகூட்டம்</u>**

**அன்புடையீர் !**

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்பந்தமாக.

****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 27.05.2022 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத் தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,

**60)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நலஅலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களின் ஏப்ரல் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>: –** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**<u>.மன்றத் தீர்மானம் எண். 60, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.

UnRegistered

மயிலாடுதுறை நகராட்சி.

**61)** இந்நகராட்சியின் நிலை வழக்கறிஞர் புதியதாக தேர்ந்தெடுப்பதற்கு மாயூரம் பார்அசோசியன் தலைவர் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு ஒரேயொரு விண்ணப்பம் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | பெயர் | வயது | அனுபவம் ஆண்டுகள் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். சங்கரநாராயணன், B..A.B.L | 29.07.1982 | 17 ஆண்டுகள் |

வரப்பெற்றுள்ள மேற்கண்ட திரு.எஸ். சங்கரநாராணயன், B..A.B.L,என்பவரை நிலை வழக்கறிஞராக தேர்வு செய்வது தொடர்பாக மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**.மன்றத் தீர்மானம் எண். 61, நாள்: 27 05. 2022**

நகராட்சி வழக்கறிஞராக திரு. S. சங்கரநாரயணன், B.A.BL., அவர்களை நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்து கொள்ள ஏக மனதாக அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண். 8035/2010/சி1**

**62)** மயிலாடுதுறை நகராட்சி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT Scheme) 2021-2022ன் கீழ் குளங்கள் மேம்படுத்தும் பணி மேற்கொள்ள மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியுவர்களுக்கான பட்டியல் தொகை ரூ.32,335/– (ரூபாய் முப்பத்தி இரண்டாயிரத்து முந்நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்) Flame Advertising Company Pvt, Ltd, Chennai. நிறுவனத்திற்கு வழங்கிடவும், வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**மன்றத் தீர்மானம் எண். 62, நாள்: 27 05. 2022**

மன்றம் பதிவு செய்து அனுமதி அளிக்கப்பட்டது

UnRegistered

**ந.க.எண்.4200/2021/இ1**

**63)** மயிலாடுதுறை நகராட்சியால் கோரிய நகர்ப்பற சுகாதாரத்திட்டம் NULM-2020–2021ன் கீழ் வார்டு எண்.11, சின்னஎரகலித்தெருவில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்ள்ளி கோரியமைக்கான பட்டியல் தொகை ரூ.32335–ஐ வழங்கிட Flame Advertising Company Pvt, Ltd.,Chennai. நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**மன்றத் தீர்மானம் எண். 63, நாள்: 27 05. 2022**

மன்றம் பதிவு செய்து அனுமதி அளிக்கப்பட்டது

**ந.க.எண்.455/2021/இ1**

**64)** மயிலாடுதுறை நகராட்சியால் 15–வது மத்திய நிதிக்குழுத் திட்டம் (Tied Grant) திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாவட்ட அளவில் தமிழ் முரசு நாளிதழில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை பெயரிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.8694/– (ரூபாய் எட்டரயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)–ஐ வழங்கிட KAL Publication (P) Ltd. Trichy நிறுவனம் பட்டியல் அனுப்பப்பட்டது. மேற்படி, பட்டியல் தொகைகள் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 64, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அனுமதி அளிக்கப்பட்டது

**ந.க.எண்.00213/2021/அ1**

**65)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாக உபயோகம் அற்று பயன்படுத்த இயலாமல் திருத்தி வைக்கப்பட்ட ஈப்பு மற்றும் பொது சுகாதார பணிக்கு பயன் படுத்தப்பட்ட 15 எண்ணிக்கை வாகனங்களை உடனடியாக கழிவு செய்து பொது ஏலம் விட நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.2652/2018/தி2,நாள்:11.03.2021–ல் அறிவுறுத்தப்பட்டதின்படி மேற்கண்ட இந்நகராட்சி வாகனங்களுக்கு தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புதுறை தானியங்கிப் பொறியாளர் அரசு தானியங்கிப் பணிமனை, தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். நாள்:25.03.2022ன் மூல மகழிவு சான்று பெறப்பட்டுள்ளது. எனவே, கழிவு சான்று பெறப்பட்டுள்ள 15 எண்ணிக்கை வாகனங்களை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்தவும் மற்றும் பழுதடைந்த குடிநீர், பாதாள சாக்கடை தளவாட பொருட்கள், பழைய தெருவிளக்கு உபகரணங்கள் தற்போது பயன்படுத்தஇயலாத நிலையில் உள்ளதை கழிவு செய்து பொது ஏலம்விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக் குறிப்பு :– 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) மேற்படி பணியின் அவசியம் கருதி மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஏல அறிவிப்பு கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 65, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண்.4009/2021/அ1**

**66)** நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.17021–1/2022/EA-1, நாள்:14.12.2021ல் வழங்கியுள்ள அறிவுரையின்படி மயிலாடுதுறை நகராட்சியில் மூலதன மான்யநிதி (CCF) மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடை வெளி நிரப்பும் நிதி 2021–2022ன்கீழ் ஒதுயாகி

Unregistered

கிராமத்தில் அமைந்துள்ள 5.85 MLD கொள்ளளவும் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring Systems (OCEMS) நிறுவும் பணியினை ரூ.41.72. இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—** 1) மன்றம் அனுமதிக்கலாம்,
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின்முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :— 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) மேற்படி பணியின் அவசியம் கருதி மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஏல அறிவிப்பு கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 66, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண்.00213/2021/அ1**

**67) )** மயிலாடுதுறை நகராட்சியின் தொழில்சார்ந்த வல்லுநர் உரிமம்பெற அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA1)துறை நாள்.04.02.2019—ல் தெரிவித்துள்ளவாறு இணையதள வழியாக விண்ணப்பித்து நேர்முக கலந்தாய்வில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில்சார்ந்த வல்லுநர்கள் பதிவு சான்று கீழ்காணும் பட்டியல்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | தொழில் சார்ந்த வல்லுநர்களின் பெயர் | தொழில்தரம் | பதிவு எண். | உரிமம் முடிவுறும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி. ரவிச்சந்திரன் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00001 | 31/03/2024 வரை |
| 2 | கே. கார்த்திக்கேயன் | பொறியாளர் தரம் —3 | 097/LS/2019/00002 | 31/03/2024 வரை |
| 3 | கே. கோவிந்தகுமார் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00003 | 31/03/2024 வரை |
| 4 | ஆர். பாஸ்கர் | பொறியாளர் தரம் —3 | 097/LS/2019/00004 | 31/03/2024 வரை |
| 5 | எஸ். அசோக்குமார் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00005 | 31/03/2024 வரை |
| 6 | ஜி. ராமதுரை | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00006 | 31/03/2024 வரை |
| 7 | எஸ். சுரேஷ் | பொறியாளர் தரம் —3 | 097/LS/2019/00007 | 31/03/2024 வரை |
| 8 | எஸ். யாகேஸ்வரன் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00008 | 31/03/2024 வரை |
| 9 | எஸ். ஆனந்த் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00009 | 31/03/2024 வரை |
| 10 | ஏ. அபிராமசுந்தரம் | பொறியாளர் தரம் —3 | 097/LS/2019/00010 | 31/03/2024 வரை |
| 11 | டி. ராமச்சந்திரன் | பொறியாளர் தரம் —3 | 097/LS/2019/00011 | 31/03/2024 வரை |
| 12 | எம். பாலாஜி | பொறியாளர் தரம்—3 | 097/LS/2019/00012 | 31/03/2024 வரை |
| 13 | கே. ரவி | பொறியாளர் தரம்—1 | 097/LS/2019/00013 | 31/03/2024 வரை |
| 14 | எஸ். அருண்குமார் | பொறியாளர் தரம்—2 | 097/LS/2019/00014 | 31/03/2024 வரை |
| 15 | ஜெ. பிரிட்டோ சேவியர் | பொறியாளர் தரம் —1 | 097/LS/2019/00015 | 31/03/2024 வரை |

UnRegistered

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | எஸ். பாலாஜி | பொறியாளர் தரம் –2 | 097/LS/2019/00016 | 31/03/2024 வரை |
| 17 | பி. கோவிந்தராஜன் | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00017 | 31/03/2024 வரை |
| 18 | எஸ். வெங்கடேசன் | பொறியாளர் தரம் –1 | 097/LS/2019/00018 | 31/03/2024 வரை |
| 19 | எஸ். பிரபு | பொறியாளர் தரம் –2 | 097/CP/19-20/00019 | 31/03/2024 வரை |
| 20 | பி. ரவிச்சந்திரன் | பொறியாளர் தரம் –3 | 097/CP/19-20/00020 | 31/03/2024 வரை |
| 21 | வி. நிர்மல்ராஜ் | பொறியாளர் தரம் –1 | 097/CP/19-20/00021 | 31/03/2024 வரை |
| 22 | ஆர். ரமேஷ் | பொறியாளர் தரம் –1 | 097/CP/19-20/00022 | 31/03/2024 வரை |
| 23 | ஜே.ஸ்ரீதர் | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00030 | 31/03/2024 வரை |
| 24 | எம்.ரமேஷ் | பொறியாளர் தரம் –1 | 097/LS/2019/00031 | 31.03.2024 வரை |
| 25 | கே.சுந்தர மூர்த்தி | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00023 | 31.03.2024 வரை |
| 26 | பி.பத்மநாதன் | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00029 | 31.03.2024 வரை |
| 27 | எம்.கண்ணன் | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00028 | 31.03.2024 வரை |
| 28 | ஆர்.அருள் ஜோதி | பொறியாளர் தரம் –1 | 097/LS/2019/00027 | 31.03.2024 வரை |
| 29 | எ.ரவி | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00026 | 31.03.2024 வரை |
| 30 | எஸ்,அகோரம் | பொறியாளர் தரம் –3 | 097/LS/2019/00025 | 31.03.2024 வரை |
| 31 | கே.சிவபிரகாசம் | பொறியாளர் தரம் –1 | 097/LS/2019/00024 | 31.03.2024 வரை |
| 32 | M.பிரேம் நௌஷாத், | பொறியாளர் தரம் –3 | 097/LS/2021/00021 | 31.03.2026 வரை |
| 33 | R.வினோத், | பொறியாளர் தரம் –3 | 097/LS/2021/00020 | 31.03.2026 வரை |
| 34 | R.செல்வக்குமார், | பொறியாளர் தரம் –3 | 097/LS/2021/00019 | 31.03.2026 வரை |
| 35 | S.K.சபரி, | பொறியாளர் தரம் –3 | 097/LS/2021/00018 | 31.03.2026 வரை |
| 36 | M.செந்தில்குமார், | பொறியாளர் தரம் –1 | 097/LS/2021/00017 | 31.03.2026 வரை |
| 37 | D.சுவாமி நாதன், | பொறியாளர் தரம் –1 | 097/LS/2021/00016 | 31.03.2026 வரை |
| 38 | P.அரவிந்தன், | பொறியாளர் தரம் –2 | 097/LS/2021/00015 | 31.03.2026 வரை |
| 39 | S.சக்திவேந்தன், | பொறியாளர் தரம் –3 | 097/LS/2021/00001 | 31.03.2026 வரை |
| 40 | B.பொற்செல்வன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00013 | 31.03.2026 வரை |
| 41 | P.மதிவாணன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00012 | 31.03.2026 வரை |
| 42 | V.அறிவழகன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00011 | 31.03.2026 வரை |
| 43 | S.மோகன்ராஜ், | பொறியாளர் தரம்–2 | 097/LS/2021/00010 | 31.03.2026 வரை |
| 44 | S.செல்வசுகுமாறன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00009 | 31.03.2026 வரை |
| 45 | R.சிவராஜ் | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00008 | 31.03.2026 வரை |
| 46 | U.சுரேஷ்குமார், | பொறியாளர் தரம்–1 | 097/LS/2021/00007 | 31.03.2026 வரை |
| 47 | P.பிரேம்குமார், | பொறியாளர் தரம்–2 | 097/LS/2021/00006 | 31.03.2026 வரை |
| 48 | B.திவ்யா | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00005 | 31.03.2026 வரை |
| 49 | G.K.செந்தில்குமார், | பொறியாளர் தரம்–1 | 097/LS/2021/00014 | 31.03.2026 வரை |
| 50 | J.கிரிராஜ், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00004 | 31.03.2026 வரை |

UnRegistered

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | S.வெங்கடேஸ்வரன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00003 | 31.03.2026 வரை |
| 52 | S.வெங்கட்ராமன், | பொறியாளர் தரம்–3 | 097/LS/2021/00002 | 31.03.2026 வரை |

மேற்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 67, நாள்: 27 05. 2022**

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**ந.க.எண். 4538/2019/எப்1.**

**68)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர் நிலைகள் குப்பைகள் கொட்டி மாசுப்படுத்துதல், நீர் நிலைகளில் கழிவு நீர் கலப்பது மற்றும் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக திரு.எஸ்.விஜயக்குமார் என்பவர் மாண்பமை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடர்ந்த வழக்கு OA No.92/2017(SZ) மற்றும் OA No.23/2018 (SZ) –ன் 03.02.2022 ஆணையின் படி சுற்றுச்சூழல் மாசுக்கான இழப்பீடு தொகை ரூ. 9,00,000./ (ரூபாய் ஒன்பது லட்சம்) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு “TNPCB-ENVIRONMENTAL COMPENSATION FUND” என்ற பெயரில் வங்கி வரைவேலை மூலம் செலுத்த வேண்டும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் ந.க.எண்:DEE/TNPCB/NPM/NGT Case/O.A.No.92/2017 &23/2018(SZ) /2022, நாள்:23.03.2022–ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை உரிய காலத்தில் செலுத்த தவறினால் மேற்கண்ட தொகையுடன் சேர்த்து அபராத தொகையும் செலுத்த வேண்டிய நிலை எற்படும் என்ற காரணத்தினாலும், மாண்பமை தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் கண்டனத்திற்கு உட்பட நேரிடும் என்பதால் நீதிமன்ற அவமதிப்பை தவிற்க்கும் பொருட்டு மேற்கண்ட தொகையினை உடன் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றத் தீர்மானம் எண். 68, நாள்: 27 05. 2022**

மன்றம் பதிவு செய்யப்பட்டது அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண்:2693/2021/எப்1**

**69)** நராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280/2020/ IT, நாள்.31.03.2022–இல் இணைத்து வரப்பட்ட பட்டியலில் மயிலாடுதுறை நகராட்சியின் வரி வசூல் சேவை மையத்தின் (TNSUDP-UTIS) சேவைக்கான Band with Cost கட்டணத்தொகை 01.07.2021 முதல் 30.09.2021 வரை ரூ59818/–, மற்றும் 01.10.2021 முதல் 31.12.2021 வரை ரூ.59818/– ஆக கூடுதல் ரூ.119636/– (ஒரு லட்சத்து பத்தொன்பதாயிரத்து அறநூற்று முப்பத்து ஆறு மட்டும்) Account Officer,M/s BSNL, Tamilnadu Circle என்ற றுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை Account Officer,M/s BSNL, Tamilnadu Circle என்ற கணக்கு தலைப்பில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப் .** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

Unregistered

2. வரி வசூல் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தியதையும் அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 69, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்.** 481/2012/எப்1

**70)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN-51-S5146-க்கு 2022–2023ம் ஆண்டுக்கு தகுதிச்சான்று பெற்றதற்கான செலவின தொகை ரூ.16,758/– (ரூபாய் பதினாராயிரத்து எழுநூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) ஆகும். இத்தொகையினை வாகன ஓட்டுனர் திரு..ஏ.ஏழுமலை அவர்களால் ரொக்கமாக செலுத்தப்பட்டு உரிய சான்று பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்தொகையினை திரு.ஏ.ஏழுமலை வாகன ஓட்டுனர் அவர்களுக்கு திரும்ப வழங்கிடவும், இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 70, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்.** 01045/2022/எச்1

**71)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33, டபீர் தெருவில் உள்ள கோவிந்த் அபார்ட்மெண்ட் என்ற கட்டிட வளாகத்தில் குடியிருப்பு நல சங்கம் சார்பாக அனுமதியின்றி சிறிய கோயில் கட்டுவது குறித்து திரு.எம்.செல்வராஜ், த/பெ. முத்தையன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.5851/2022, தொடர்பாக வழக்கு கட்டணம் ரூ.15000/– (ரூபாய் பதினைந்து ஆயிரம் வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ் என்பவரால் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கட்டணத்தொகை மற்றும் இதர வழக்கு செலவினங்கள் உட்பட்ட வழக்குத் தொகையினை உத்தேச செலவினம் ரூ.3000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப் .** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 71, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்.** 3944/2022/எப்1

**72)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, பிளாக் எண்.2, 6 நகரளவு எண்.180 மற்றும் 168 இல் தருமபுரம் சாலையின் வடக்குப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறையின் (DTC) ஒப்புதல் பெற வரைபடம் தயார் செய்து இணையதளம் மூலம் விண்ணப்பிக்க உத்தேச செலவினத்தொகை ரூ.50000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) க்கிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Unregistered

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 72, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண். 3536/2016/இ1**

**73)** மயிலாடுதுறை நகராட்சியின் புதிய பேருந்து நிலையம் மணக்குடி கிராமத்தில் Rs.No.169/1ஏ1 பகுதி, 170, 172, 174, 175 மற்றும் 176 பகுதியில் 13.77 ஏக்கர் இடத்தில் அமைப்பது தொடர்பாக நகர்ஊரமைப்புதுறை, மயிலாடுதுறை (DTCP)யின் மூலம் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து அனுமதிபெற Auto cad மூலம் வரைபடம் தயார் செய்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.100000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 73, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண். 4812/2016/இ1**

**74)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள STP கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Inlet மற்றும் Outlet கழிவு நீர்களை மாதந்தோறும் பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற்றிட (பிப்ரவரி 2022 முதல் மார்ச் 2023 வரை 14 மாதங்களுக்கு) ஆகும் உத்தேச செலவீனம் ரூ.84,280/–(ரூபாய் எண்பத்தி நான்காயிரத்து இருநூாற்று எண்பது மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து கேட்பின் அடிப்படையில் அவ்வபோது மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் நாகை அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:: அனுமதிக்கலாம்.</u>**

**மன்றத் தீர்மானம் எண். 74, நாள்: 27 05. 2022**
மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண். 7724/99/இ3**

**75)** மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள வாகனங்களுக்கு 2022-2023ம் ஆண்டுக்கான சாலைவரிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.1,41,327/- (ரூபாய் ஒரு இலட்சத்தி நாற்பத்தி ஓராயிரத்தி முண்ணுற்று இருபத்தி மட்டும்).
□□ □□ □ □ □ □□ அலுவலர்
அவர்களால் □ □ □ □ □□
ஓட் நர் □□ அழகி v
□□ □□ இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | தொகை |
|---|---|---|

UnRegistered

| | | |
|---|---|---|
| 1 | TN-51S-1077 | 24500 |
| 2 | TN-51P-0798 | 42842 |
| 3 | TN-51C-3108 | 42842 |
| 4 | TN-51K-5337 | 23543 |
| 5 | TN-82K-7349 | 7600 |
| | மொத்தம் | 141327 |

**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. v v
நிர்வாக v நகர் லைவ

v

**மன்றத் தீர்மானம் எண். 75, நாள்: 27 05. 2022**
மன்றம் பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண். 1097/2022/இ2**

**76)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது இந்நகராட்சியிலிருந்து 26-கி.மீ தொலைவில் உள்ள முடிகண்டநல்லூர் கொள்ளிடம் ஆற்றங்கரையில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, அதிலிருந்து 23.98 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிநீர் நீரேற்றம் செய்து இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 5-மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் சேகரம் செய்யப்பட்டு, இந்நகராட்சி பொதுமக்களுக்கு தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் மேற்படி பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், பிரதான குழாய்களில் அவ்வபோது கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகிறது. இதனை உடனடியாக சீர் செய்ய வேண்டுவது அவசியம் என்பதால் 2022 ஜுன் மாதம் முதல் 2023-மே மாதம் வரை ஓராண்டு காலத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 லட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி குடிநீர் திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 76, நாள்: 27 05. 2022**
மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண்.1759/2022/இ1**

Unregistered

**77)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள STP கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Inlet மற்றும் Outlet கழிவு நீர்களை பிரதி மாதமும் ஆய்வு செய்திட (டிசம்பர் 2021 முதல் ஜனவரி 2022 வரை) ஆகும் செலவீனம் ரூ.12,040/– (ரூபாய் பன்னிரண்டு ஆயிரத்து நாற்பது மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:</u> 1) அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் நாகை அவர்களுக்கு தொகை செலுத்தியதையும் ஏற்கலாம்.

## <u>மன்றத் தீர்மானம் எண். 77, நாள்: 27 05. 2022</u>

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண். 7724/99/இ3**

**78)** சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில் சொத்துவரி,காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு 2022–2023ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட நகர்மன்ற 07.04.2022ம் தேதிய 59ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சொத்து உரிமையாளர்கள் சொத்து வரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபணைகள்,ஆலோசனைகள் ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ, இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அளித்திடும் வகையில் தினகரன், தினதந்தி ஆகிய தமிழ் நாளிதழிலும், Trinity Mirror ஆங்கில நாளிதழிலும் மற்றும் அலுவலக விளம்பர பலகையிலும் (14.04.2022) விளம்பரப்படுத்தப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு நான்கு ஆட்சேபணை கடிதங்கள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

1. திரு.பி.சீனிவாசன், மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), நெ.1 காமராஜர் சாலை, மயிலாடுதுறை.
2. திரு.அ.ஜலாலுதீன், தீன் பிளாசா, 30, ஸ்டேட் பாங்க் ரோடு, மயிலாடுதுறை.
3. திரு.அ.ஜலாலுதீன் மற்றும் அ.ரபியூதீன், தீன் ஐடி பார்க், ஸ்டேட் பாங்க் ரோடு, மயிலாடுதுறை.
4. திருமதி.அபுரோஜாகனி, தீன் காம்பளக்ஸ் கட்டிடம், விஜயா தியேட்டர் ரோடு, அவயாம்பாள்புரம், மயிலாடுதுறை.

அலுவலக குறிப்பு: இந்நகராட்சி சொத்துவரி / காலிமனை வரிவிதிப்புகள் 28696 எண்ணிக்கை உள்ளது. அதில் பெரும்பாலோனரால் எந்தவித ஆட்சேபணையும் எழுப்பப்படவில்லை புறக்கணிக்கதக்க அளவில் மேற்கண்ட 4 நபர்களிடமிருந்து மட்டுமே ஆட்சேபணை கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, ஏற்கனவே இந்நகர்மன்ற 07.04.2022ம் தேதிய 59ம் எண் தீர்மானத்தின்படி 2022–2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு முதல் (01.04.2022) சொத்துவரி மற்றும் காலிமனைவரி சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>மன்றத் தீர்மானம் எண். 78, நாள்: 27 05. 2022</u>

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Unregistered

**ந.க.எண்.1258/2022/அ1**

**79)** மயிலாடுதுறை நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி கும்பகோணம் சாலை, தலைமை அஞ்சல் நிலையம், கச்சேரி ரோடு, கண்ணாரத்தெரு சந்திப்பு வழியாக கழிவு நீர் உந்து நிலையம் எண் (4) வரை செல்லும் பிரதான கழிவு நீர் குழாயில் திருவாரூர் சாலை – அய்யாரப்பர் கோயில் வீதி சந்திப்பு அருகே கழிவு நீர் குழாய் பழுதடைந்துள்ளது.

இதனால் நகரில் சேகரம் ஆகும் சுமார் அறுபது சதவிகித கழிவுநீர் முழுமையாக கழிவு நீர் உந்து நிலையம் எண் (4) ஐ சென்றடைய முடியாமல் வழியில் உள்ள **Manhole Cover** வழியாக வழிந்தோடுகிறது.

எனவே, கழிவுநீர் முழுமையடையவும், சீரான வேகத்திலும் சென்றடைய வசதியாக, பழுதான கழிவுநீர் குழாய்களை அகற்றி புதிய கழிவு நீர் குழாய் **(D.I.Fiper)** பதித்து சரிசெய்ய வேண்டியுள்ளது. இப்பணி நெடுஞ்சாலை துறையான மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்கான உத்தேச செலவினம் **ரூ.25.00** இலட்சம் ஆகும். இதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 79, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ந.க.எண்.2113/2019/இ1**

**80)** மயிலாடுதுறை நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி கும்பகோணம் சாலை, தலைமை அஞ்சல் நிலையம், கச்சேரி ரோடு, கண்ணாரத்தெரு சந்திப்பு வழியாக கழிவு நீர் உந்து நிலையம் எண் (4) வரை செல்லும் பிரதான கழிவு நீர் குழாயில் கண்ணாரத்தெரு/காமராஜர் சாலை சந்திப்பு அருகே **(Jenifer Sweet Shop)** உள்ள கழிவு நீர் குழாய் பழுதடைந்துள்ளது. இதனால் நகரில் சேகரம் ஆகும் சுமார் அறுபது சதவிகித கழிவுநீர் உந்து நிலையம் எண் (4)ஐ முழுமையாக சென்றடைய முடியாமல் வழியில் உள்ள **Manhole Cover** வழியாக வழிந்தோடுகிறது.

எனவே, கழிவுநீர் முழுமையாகவும், சீராகவும் கழிவு நீர் உந்து நிலையம் எண் (4) ஐ முழுமையாக சென்றடைய வசதியாக, பழுதான கழிவுநீர் குழாய்கள் அகற்றி புதிய கழிவு நீர் குழாய் **(D.E.Pipes)** பதித்து சரிசெய்ய வேண்டியுள்ளது. இப்பணி நெடுஞ்சாலை துறையான மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்கான உத்தேச செலவினம் **ரூ.25.00** இலட்சம் ஆகும். இதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண். 80, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**ந.க.எண். 2114/2019/இ1**

UnRegistered

**81)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி இப்பணி தற்பொழுது **M/s வெர்சடைல் Engineering Services** மயிலாடுதுறை தங்களுக்கு வழங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உள்ளாட்சி தேர்தல் 2022 காரணமாக மார்ச் 2022 முதல் மே 2022 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டு அதே ஒப்பந்தத்தின் மூலம் நடப்பில் உள்ள ஒப்பந்த விலைவிகிதப்படி பணி நடைபெற்று வருகிறது.

குடிநீர்/பாதாள சாக்கடை திட்டம்/மின்விளக்கு போன்ற பராமரிப்பு பணிகளுக்கு தேவையான பணியாட்கள் மூலம் நியமித்து கொள்வது சம்மந்தமான வரிவிகித அறிக்கை ஒப்புதலுக்காக உயர்நிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அது சம்மந்தமாக நம்புதல்/உத்திரவு கிடைக்கப்பெறும்வரை குறுகிய காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் பராமரிப்பு பணி தொடர வேண்டியுள்ளது.

எனவே, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த விலைவிகிதப்படி அதே ஒப்பந்ததாரர் மூலம் மேலும், மூன்று மாதத்திற்கு (ஜுன், ஜுலை + ஆகஸ்ட் 2022) பராமரிப்பு பணி தொடர அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. இப்பணிக்கான உத்தேச செலவினம் **ரூ.32.60** இலட்சம் ஆகும். இதற்கு ஆகும் செலவீனத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**மன்றத் தீர்மானம் எண். 81, நாள்: 27 05. 2022**</u>

மன்றம் அனுமதிக்கப்பட்டது. மேலும் 2 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ். கணேசன், 3–வது வார்டு திருமதி.கல்யாணி ரகு, ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து பதிவு செய்துள்ளார்கள்

**ந.க.எண்.2116/2019/இ1**

**82)** மயிலாடுதுறை நகராட்சி, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 3406 ஆழ்நிலை தொட்டிகளில் பல இடங்களில் ஆள்நுழைவு தொட்டிகள் சேதம் அடைந்தும், சாலை மட்டத்திற்கு கீழேயும் உள்ளதால் சேதமடைந்த ஆள்நுழைவு தொட்டிகளை சீர் செய்திடவும் சாலை மட்டத்திற்கு கீழேயுள்ள ஆள்நுழைவு தொட்டிகளை சாலை மட்டத்திற்கு உயர்த்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9.90** இலட்சம் ஆகும். மேற்படி பணியினை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**மன்றத் தீர்மானம் எண். 82, நாள்: 27 05. 2022**</u>

மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

Unregistered

ந.க.எண்.2116/2019/இ1

**83)** மயிலாடுதுறை நகராட்சியில் ஐந்து எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், முடிகண்ட நல்லுார் தலைமை நீரேற்று நியைம், **Housing Board motor** இயக்குதல் மற்றும் நீரேற்றம் செய்யும் பணிகளுக்கு போதுமான குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், அத்தியாவசிய பணியான குடிநீர் பராமரிப்பு பணிகளை உடனுக்குடன்

மேற்கொண்டிடவும் சிரம நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே இப்பணியினை தடையின்றி செயல்படுத்திட ஏதுவாக அப்பணிக்காக ஒன்பது நபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் ஊதிய விகிதத்தில் பணியமர்த்தி கொள்ள தேவையான மதிப்பீடு தொகை (மே-2022, ஜீலை 2022 வரை) மூன்று மாதங்களுக்கு **ரூ.4.25/- இலட்சம் (ரூபாய் நான்கு லட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)** ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 83, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண். 2115/2022/இ1**

**84)** மயிலாடுதுறை நகராட்சியில் Animal Birth Control Center (ABC Center) தற்பொழுது பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. ABC கட்டிட பின்புறம் G.I Sheet Roof with M.S Pipe as post அமைத்தல் பணி Side அடைத்தல் தேவையான இடத்தில் TAP-வுடன் கூடிய குடிநீர் வசதி செய்தல், கூடுதல் Hand wash Basin (பெரியது), விலங்குகள் அடைக்கப்பட்ட அறையில் இருந்து தப்பிவிடாமல் நெருக்கமான அடைப்பு ஏற்படுத்துதல் மற்றும் தேவையான இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது இப்பணிக்கான உத்தேச செலவீனம் ரூ.4.50 இலட்சம் ஆகும், இதனை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u> : அனுமதிக்கலாம்.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 84, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண். /2022/இ1**

Unregistered

**85)** மயிலாடுதுறை நகராட்சி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22 ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22 | | | | | |
| 1 | மயிலாடுதுறை நகராட்சி தியாகி நாராயணசாமி மேல்நிலைப்பள்ளியில் சமையல் அறை கட்டும் பணி. | 8,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.684618.01 (-) 0.03% குறைவு | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.686025.75 (+) 0.2% அதிகம் | |
| 2 | மயிலாடுதுறை கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மேற்கூறை அமைக்கும் பணி. | 8,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.631879.36 (-) 0.12% குறைவு | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.633839.35 (+) 0.2% அதிகம் | |
| 3 | மயிலாடுதுறை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஷெட் அமைக்கும் பணி. | 2,50,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.224638.62 (-) 0.23% குறைவு | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.225931.02 (+) 0.3% அதிகம் | |
| 4 | மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் காத்திருப்பு அறை கட்டும் பணி. | 3,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.258132/00 (-) 0.15% குறைவு | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. . |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.259567.50 (+) 0.4% அதிகம் | |
| 5 | மயிலாடுதுறை நகராட்சியில் 6–வது வார்டு தோப்புத்தெரு அருகில் காவேரி கரையில் படித்துறை கட்டும் பணி. | 5,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.439357.63 (-) 0.04% குறைவு | M/s SVS Engineering Contractor Mayiladuthurai. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.439800.74 (+) 0.1% அதிகம் | |
| 6 | மயிலாடுதுறை ஆனதாண்டவபுரம் சாலையில் பள்ளி அருகில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி. | 3,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.261406.56 (+) 0.03% அதிகம் | M/s SVS Engineering Contractor Mayiladuthurai. . |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.261668. 55 (+) 0.6% அதிகம் | |

UnRegistered

<u>அலுவலககுறிப்பு</u>:: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

## <u>மன்றத் தீர்மானம் எண். 85, நாள்: 27 05. 2022</u>

மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண்: 823/2022/இ1**

**86)** மயிலாடுதுறை நகராட்சி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22 ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 15–வது மத்திய நிதி ஆணையம் 2020–21 (Tied Grant) | | | | | |
| 1 | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்பு பணி கழிவு நீர் நிலையம் எண் A 9 க்கு 125 KVA மின் ஆக்கி வாங்கும் பணி | 12,00,000/- | M/s Versatile Engineering Sarvice, Mayiladuthurai | ரூ.1075000.00 (+) 2.58% அதிகம் | M/s Versatile Engineering Sarvice, Mayiladuthurai |
| | | | Thiru. K.Mailvagan an Mayiladuthurai. | ரூ.1100000.00 (+) 5.0% அதிகம் | |
| | | | M/s Hytro Electrical Systems (p) ltd, Chennai – 88 | ரூ.1123928.00 (+) 6.90% அதிகம் | |
| | | | M/S Valde Tech (I) Pvt Ltd, Chennai - 42 | ரூ.1177499.00 (+) 11.80% அதிகம் | |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் Collector well - க்கு 125HP turbine pumpset மற்றும் தேவையான மின் உதிரிபாகங்கள் வாங்கி பொருத்தும் பணி | 36, 55,000/- | நிர்வாக காரணங்களால் இரத்து செய்யப்பட்டது. | | |

UnRegistered

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15–வது மத்திய நிதி ஆணையம் 2021–22 (**Un Tied Grant**) | | | | | |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் மர கழிவுகளை அரைக்கும் இயந்திரம் வாங்கும் பணி | 20,00,000/- | M/s Diamond art Cuttng and stickers, Namakkal | ரூ.1999250.00 (-) 0.01% குறைவு | M/s Diamond art Cuttng and stickers, Namakkal. |
| | | | Thiru. Sri Dharshini Traders, Namakkal | ரூ.2000000.00 (+) 0.3% அதிகம் | |
| குடிநீர் திட்ட நிதி | | | | | |
| 4 | இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பழுதடைந்துள்ள மினிபவர் பம்புகளை சரிசெய்யும் பணி. | 9,90,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.868395.00 (-) 0.07% குறைவு | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai.. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.870365.00 (+) 0.2% அதிகம் | |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 5 | பாதாள சாக்கடை பராமரிப்பு பணி – இந்நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள ஆள்நுழைவு தொட்டியின் மூடிகளை (**Manhole Cover**) சரிசெய்யும் பணி. | 9,90,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.860400.00 (-) 0.03% குறைவு | M/s SVS Engineering Contractor Mayiladuthurai. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.861000.00 (+) 0.001% அதிகம் | |
| பொது நிதி | | | | | |
| 6 | இந்நகராட்சி காமராஜர் பழைய பேருந்து நிலையத்தினை சீர் செய்யும் பணி. | 9,00,000/- | M/s SVS Engineering Contractor, Mayiladuthurai. | ரூ.753857.00 (-) 0.16% குறைவு | M/s SVS Engineering Contractor Mayiladuthurai.. |
| | | | Thiru. A.Sattaiyappan, Mayiladuthurai. | ரூ.764028,00 (+) 1.20% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>: 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 86, நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

ந.க.எண்: 213/2022/இ1

UnRegistered

**87)** மயிலாடுதுறை நகராட்சியில் தமிழக உள்ளாட்சி தேர்தல் 2022 நடைபெறுவதை முன்னிட்டு இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு தேவையான மின் வசதி, சாய்வுதள வசதி, ஜன்னல் இறகுகள் ஆகியவற்றை பழுதுபார்க்கும் பணி மற்றும் புதிய தளவாட சாமான்கள் கொண்டு வாக்குச்சாவடி மைய வகுப்பறை தளங்கள் சீரமைக்கும் பணி மற்றும் வாக்குச்சாவடி மையத்தில் தேவையில்லாத திறப்புகள் அடைக்கும் பணி பழுதடைந்த வாக்குச்சாவடி மைய மேற்கூரை சீரமைக்கும் பணி வாக்குச்சாவடி மையங்களுக்கிடையே தேவையான இடங்களில் தற்காலிக தடுப்பு அமைக்கும் பணி ஆகியவை மேற்கொள்ள வேண்டியதுஅவசியமாகும்.

இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 77 வாக்குச்சாவடி மையங்களில் முப்பது மையங்களில் மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டியுள்ளது. எனவே இதற்கான உத்தேச செலவினம் ரூ.4.20 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்வதையும், தற்பொழுது தேர்தல் நடத்த விதிமுறைகள் அமலில் இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி கோரி இப்பணியினை மேற்கொள்ள வழி வகை இல்லாத காரணத்தினால் இப்பணியினை அவசர, அவசிய பணியாக நகராட்சி சட்ட விதி எண் 15–ன் கீழ் இந்நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு.G.உத்திராபதி மூலம் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண். 87, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண். 1702/2022/இ1**

Unregistered

**88)** மயிலாடுதுறை நகராட்சி கூறைநாடு நகராட்சி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் பழுதான நிலையில் உள்ளதால் அக்கடிதத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டும் பணி ரூ.80.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்கள் நாள்:28.01.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். எனவே, தற்பொழுது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை தற்காலிகமாக தரங்கம்பாடிசாலை வண்டிப்பேட்டை அருகேயுள்ள யாத்ரி நிவாஸ் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்ய நகராட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஆரம்ப சுகாதார மையம் செயல்படுவதற்கு வசதியாக யாத்ரினிவாஸ் கட்டிடத்தில் கீழ்கண்ட பராமரிப்பு (ம) பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதில் புதிய மும்முனை மின்சார இணைப்பு பெறுதல், கட்டிட ஒயரிங், சுவிட்ச் சரிசெய்தல், பழுதான ஜன்னல்கள் சரிசெய்தல், Toilet W.C and Fan, Plug point, 15A, Switch அமைத்தல் தேவையான இடங்களில் Alu Partion அமைத்தல் (ம) Alu Door- வுடன் கூடிய Alu Partion அமைத்தல், Doctor Room False Ceiling & A.C அமைத்தல், கழிவு நீரை உடன் அகற்ற வசதியதாக பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல், கட்டிட பாதுகாப்பு வேலி (M.S. Grill Work With Door) மற்றும் தேவையான இதர பணிகள் மேற்கொண்டு சுகாதார நிலையம் இயங்கும் வகையில் குடிநீர் / குடிநீர் குழாய் வசதி செய்து தரவேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சம் ஆகும். இதனை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண். 88, நாள்: 27 05. 2022</u>**
மன்றம் பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண்.2117/2022/இ1**

**89) 1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. R.ஜெயந்திரமேஷ், அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்;-**

| | |
|---|---|
| 1. | K.K. R. நகரில் மழைநீர் வடிகால் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 2. | ஆழ்வார்குளம் சந்திற்கு சிமெண்ட் சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம். |
| 3. | ஆழ்வார்குளம் சந்திற்கு போஸ்ட் மரத்துடன் கூடிய மின்கம்பம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 4. | ஆடியாபிள்ளையார்கோயில்தெரு சந்திற்கு மின்கம்பியுடன் சேர்ந்த போஸ்ட்மரம் தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 5. | ஆடியாபிள்ளையார் கோயில்தெரு சந்திற்கு சிமெண்ட்சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 6. | ஆடியாப்பிள்ளையார் கோயில் சந்திற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்துதர மன்றம் தீர்மானிக்க. |
| 7. | K.K.R. நகரில் நலசங்க வாசிகள் குழந்தைகள் விளையாடக்கூடிய நடைபயிற்சி மேற்கொள்ள பார்க் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |

<u>அலுவலக குறிப்பு</u>: – நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி, கலைஞர் நகர்ப்புறத்திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற நிதி ஆதாரங்கள் கிடைக்கு பெறும்போது பணிகளை செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

## <u>மன்றத் தீர்மானம் எண். 89, நாள்: 27 05. 2022</u>

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**90) 13–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.ரெத்தினவேலு அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்**

| | |
|---|---|
| மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டு தெருக்களை இருள் சூழ்ந்த பகுதியில் மின் விளக்கு அமைத்துதர மன்றம் தீர்மானிக்க. | |
| **i.** | பெரிய எரகலித்தெரு, வ.உ.சி. தெரு, திருப்பத்தில் உள்ள மின் கம்பத்தில் |
| **ii.** | எடத்தெரு சந்து (சிமெண்ட் ரோடு இடையில் உள்ள மின் கம்பத்தில் |
| **iii.** | எடத்தெரு, திருமஞ்சனவீதி திருப்பத்தில் உள்ள மின்கம்பத்தில். |
| **Iv.** | எடத்தெரு, திருமஞ்சனவீதி, திருப்பத்தில் கல்வெர்ட் (மழைநீர் வடிகால்) நடு பகுதியில் உடைந்து 6 மாத காலமாக அப்படியே உள்ளது. போக்குவரத்து மிகவும் இடையூறாக உள்ளது. இதனால், விபத்து ஏற்ப்படுகிறது. பழைய கல்வெர்ட் அகற்றி விட்டு புதிய கல்வெர்ட் அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |

<u>அலுவலக குறிப்பு</u>: – நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி, கலைஞர் நகர்ப்புறத்திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற நிதி ஆதாரங்கள் கிடைக்கு பெறும்போது பணிகளை செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

## <u>மன்றத் தீர்மானம் எண். 90, நாள்: 27 05. 2022</u>

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Unregistered

**91) 34–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ர.கார்த்திக் அவர்களால் கொண்டு வரப்படும் மன்ற தீர்மாங்கள்**

| | |
|---|---|
| 1 | எனது வார்டில் உள்ள JK கார்டனில் மின்கம்பங்கள் உள்ளன. அதில் நகராட்சி மின் கம்பி அமைத்து அதில் மின் விளக்கு பொருத்தி தருமாறு மன்றம் தீர்மானிக்க. |
| 2. | சத்யசாய் நகர் விரிவாக்கத்தில் கொள்ளிடம் குடிநீர் பைப்லைன் அமைத்து தரம மன்றம் தீர்மானிக்க. |
| 3. | JK கார்டனில் புதியதாக கொள்ளிடம் குடிநீர் பைப்லைன் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 4. | வண்ணாங்குளம் 3–நகருக்கும் பொதுவாகவும் அருகில் உள்ள கோவிலுக்கு பயன்பெறும் வண்ணம் அமைந்து உள்ளதால் அதில் இரு படித்துறைகள் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 5. | பட்டமங்கல ஆராயத்தெரு நடுமையத்தில் இருந்து மேற்காக பட்டமங்கல ஆராயத்தெரு முடியும் வரை மழைநீர் வடிகால் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |
| 6. | எனது வார்டிற்கு அடையாளம் கேணிக்கரை பெரியார் சிலை பக்கத்தில் உள்ள அந்த கேணிக்கரை துந்து தரையோடுதரையாக உள்ளது. அதனை தூர்வாரி தகுந்த பாதுகாப்புடன் அதனை எங்கள் பகுதியின் அடையாளமான சின்னமாக மாற்றி தருமாறு கெட்டுக்கோள்கிறேன். |
| 7. | எங்கள் பகுதியில் பஸ்நிறுத்தம் உள்ளது. ஆனால், நகராட்சி பயணிகள் நிழற்குடை அங்கு இல்லை. நகராட்சிக்கு சொந்த இடம் அங்கு உள்ளதால் கேணிக்கரையில் பயணிகள் நிழற்குடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க. |

<u>அலுவலக குறிப்பு</u>: – நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி, கலைஞர் நகர்ப்புறத்திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற நிதி ஆதாரங்கள் கிடைக்கு பெறும்போது பணிகளை செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 91 நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**92) 36–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஆனந்தி ஆனந்தகுமார், அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்:–**

| | |
|---|---|
| 1. | பிள்ளையார்தோட்டத்தில் மினிபோர்பம்பு அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| 2. | பெசன்ட் நகர் பூங்காவை சீரமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| 3. | டவுன்ஸ்டேஷன்,முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| 4. | டவுன்ஸ்டேஷன் மூனறாவதுதெருவில் தார்சாலை அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| 5. | புளியந்தெருவில் அங்கன்வாடிச் சந்தில் தார்சாலை அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |

<u>அலுவலக குறிப்பு</u>: – நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி, கலைஞர் நகர்ப்புறத்திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற நிதி ஆதாரங்கள் கிடைக்கு பெறும்போது பணிகளை செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 92 நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

UnRegistered

**93) 33–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு இரா.நடராஜன், அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்:-**

| | |
|---|---|
| **1.** | எனது வார்டில் தோப்புதெரு, செம்மங்குளம் கீழ்க்கரை சந்திப்பு கல்வெட் அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **2.** | No,1 ரோடு, செம்மங்குளம் கீழ்கரை சந்திப்பு கல்வெட் அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **3.** | தோப்புத்தெரு புதுநகரில் தார்சாலை அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **4.** | காசுக்காரத்தெரு, மணிமேகலை நகராட்சி துவக்கப்பள்ளிக்கு சிமெண்ட் சாலை அமைத்து தருதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வசதி செய்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **5.** | மடத்துசந்து புதுநகருக்கு பேவர்பிளாக் சாலை அமைத்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **6.** | வாணியத்தெரு நடுவில் உள்ள 2ம் எண். மினிபவர்பம்பை (வீட்டுவாசலில் உள்ளது) ரிப்பேர் செய்து நகற்றி தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |
| **7.** | எனது வார்டில் 5 எண்ணிக்கை புதுலைட் பிட்டிங்குடன் மேற்கண்ட பணிகளை செய்து தருவதற்கு மன்றம் தீர்மானிக்க. |

<u>அலுவலக குறிப்பு</u>: – நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாதகால் மத்திய, மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதி, கலைஞர் நகர்ப்புறத்திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற நிதி ஆதாரங்கள் கிடைக்கு பெறும்போது பணிகளை செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 93 நாள்: 27 05. 2022</u>**

மன்றம் பதிவு செய்து அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**நாள்: 27.05.2022**

**நகர்மன்ற தலைவர்,**
**மயிலாடுதுறை நகராட்சி.**

UnRegistered